NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA.

எழில்மிகு இயற்கைக் காட்சிகளை
வர்ணப் புகைப்படத்தில்
தந்திடும் தரமான
Sakura - Fuji - Kodak - Tudor
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
தொலைபேசி: 28628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

★ தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ பிரதி ஒன்று ரூபா 5/-
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
நொடியில் ஆக்குவதற்கு இலவசம்!
தொலைபேசி: 28628

சுடர் 1 யாழ்ப்பாணம் ... ஆனி 04 புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 09 (18-06-1986) UTHAYAN: A DIVERSE TAMIL DAILY சுடர்: 181

# இலங்கைக்கு நிதிஉதவி கிடைப்பதில் தடங்கல்!

## மேற்கு நாட்டு ராஜதந்திரி நிலைமையை விவரித்தார்.

பாரிஸ், ஜூன் 18

இலங்கைக்கு வெளிநாட்டு நிதிஉதவி கிடைப்பதில் பெரும் தடங்கல்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மேற்குநாடு ஒன்றின் சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவர் நிலைமையைச் சூசகமாக விவரித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான சமாதானப் பேச்சுகளில் முன்னேற்றம் இல்லையேல், அதற்குக் கடன் வழங்குவதில் சலுகை காட்டுவதற்கு சந்தர்ப்பம் அளிக்க முடியாமற்போகும். இவ்வாறு அந்த ராஜதந்திரி சொன்னார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கடந்தமுறை நடந்தபோது நாம் இலங்கை அரசுக்கு கடைசித் தடவையாக சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுத்துவிட்டோம்

இம்முறை சமாதானப் பேச்சுகளில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை என்றால், இனியும் சந்தர்ப்பம் கொடுக்கமாட்டோம் இப்படி அந்தச் சிரேஷ்ட ராஜதந்திரி சொன்னார்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் திங்கட்கிழமை பாரிஸில் ஆரம்பமானது.

இலங்கைக்கு உதவுவது சம்பந்தமான ஆய்வும், பரிசீலனையும் இம் மாதம் 21ஆம் திகதி தொடங்கும்.

இதே வேளை இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதை நிறுத்தும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியும் அவசர வேண்டுகோள் ஒன்றை சம்பந்தப்பட்ட நாடுகளிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் ஒருதலைப்பட்ச தீர்வு

### போராளிகள் கண்டனம்

சென்னை, ஜூன் 17

மாகாணசபைத் திட்டத்தை ஒருதலைப்பட்சமாக அமுல் செய்யப்போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது

அது குறித்து விடுதலைப் போராளிகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன

### விடுதலைப் புலிகள்

ஒருதலைப்பட்சமாக மாகாண சபைகள் சட்டத்தை அமுல் நடத்தப்போவதாக இலங்கை அரசு அறிவித்திருப்பது முற்றிலும் முரண்பட்ட செயல்

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் சென்னையில் தெரிவித்தார்

இலங்கை அரசு தனது யோசனைகளுக்கு மேலதிக விளக்கங்களை அனுப்பப்போவதாக இந்தியாவுக்கு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் சர்வகட்சி மாநாட்டையும் கூட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது. இராணுவ நடவடிக்கை எடுக்கவும் முயற்சிக்கிறது.

இறுதி நோக்கமாக இராணுவத் தீர்வு காணுவதையே இலங்கை அரசு தனது கொள்கையாக வைத்துள்ளது என்பது இதில் இருந்து புலனாகின்றது

இன்றைய சூழ்நிலையில் மாகாணசபைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு தேர்தலை இலங்கை அரசு எப்படி நடத்தப்போகிறது?

யாழ் குடாநாடு இன்று எமது பூரணக் கட்டுப்பாட்டில். ஏனைய வடபகுதிகளில் படையினர் வெளியே வந்தால் நாம் விரட்டுவோம்

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் சொன்னார்.

### ஈ. பி. ஆர். எல். எவ்,

ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசு தனது யோசனைகளை செயல்படுத்தப்போவதாக அறிவித்திருப்பது நிச்சயம் அதன் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும்.

இப்படி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பேச்சாளர் திரு. எல். கேதீஸ்வரன் தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது:—

இனப்பிரச்சினைக்கான தனது மாகாணசபை யோசனைகளை தன்னிச்சையாக நடைமுறைப் படுத்தப்போவதாக இலங்கை அரசு அறிவித்திருப்பது உலக அபிப்பிராயத்தைத் திசைதிருப்பும் தந்திரமாகும். இந்த அறிவிப்பு பாரிஸில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடக்கவிருக்கும் சமயத்தில் தான் வெளிவந்துள்ளது முக்கியமானது.

"இனவாத" இலங்கை அரசுக்கான உதவிகளை நிறுத்தும்படி மேற்கு நாடுகளை அந்நாட்டு மக்களும் தொண்டர் நிறுவனங்களும் வற்புறுத்தத் தொடங்கியுள்ளன.

யோசனைகளை ஒருதலைப்பட்சமாக அமுல் நடத்த முடிவு செய்வதன் மூலம் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணுவதற்கான இந்தியாவின் முயற்சியை செல்லாக்காசாக்குவதே இலங்கை அரசின் அடுத்த நோக்கம்.

தமிழர்களின் ஏன், சிங்களவரின் அனுமதி கூட இன்றி ஒருதலைப்பட்சமாக தனது யோசனைகளை அமுல்நடத்த இலங்கை அரசு முயற்சிப்பது அதன் வீழ்ச்சிக்கே நிச்சயம் வழிவகுக்கும்

— இப்படி திரு கேதீஸ்வரன் தெரிவித்தார்.

### ஈரோஸ் இயக்கம்

ஒருதலைப் பட்சமாக தனது யோசனைகளை அமுல் நடத்தப்போவதாக இலங்கை அரசு அறிவித்து இருப்பது, தமிழர் அமைப்புக்களுடனோ, இந்தியாவுடனோ பேச்சுக்கள் நடத்த திரு ஜெயவர்த்தன தயார் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஈரோஸ் இயக்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினை பற்றி இந்தியாவுடன் தொடர்ந்து பேச தயாராக இருப்பதாக திரு. ஜெயவர்த்தன கூறி வருவது, அவரின் 'இரட்டை வேடத்தை'யே காட்டுகிறது. இது தான் அவரின் ராஜதந்திரம்

ஒருதலைப்பட்சமான முறையில் தீர்வுக்கான யோசனைகளை இலங்கை அரசாங்கம், வாராந்தர அமைச்சரவைக் கூட்டமுடிவில் அறிவித்துள்ளது. எந்த யோசனைகளை அமுல் நடத்தப்போவதாக அரசு இன்னும் தெரிவிக்கவில்லை

இப்படி ஈரோஸ் கூறியுள்ளது. (உ—எ—2)

## தமிழர்கள் மீது காடைத்தனம் விரைவில் கட்டவிழ்க்கப்படும்

### உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்கிறது கூட்டணி

சென்னை, ஜூன் 17

இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் அப்பாவித் தமிழர் மீது விரைவில் பெருமளவில் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

உலகில் உள்ள அரசாங்கங்கள் இலங்கைத் தமிழரின் மீது நடத்தப்படும் அக்கிரமச் செயல்களைப் பாரதூரமாகக் கருதிச் செயல்பட வேண்டும்

தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அரசியல் குழுக்கூட்டத்தின் முடிவில் கூட்டணி இந்த அறிக்கையை வெளியிட்டது.

அறிக்கை வருமாறு:

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் அரச படைகள் மோசமான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. குடிமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

விமானத் தாக்குதலில் இந்துக்கோயில், பாடசாலை, பல வீடுகள் சேதமடைந்தன. கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தாங்கிய சிங்களக் குண்டர்கள் அப்பாவித் தமிழ் மக்களை தாக்குவதில் ஈடுபட்டுள்ளனர். வாகனங்களிற் பயணம் செய்யும் தமிழர்களும் தாக்கப்படுகின்றனர். உத்தியோகக் கடமைகளுக்குச் செல்லும் அரச ஊழியர்களும் தாக்கப்பட்டனர்.

உயிரிழந்த தமிழர்களின் சடலங்களை மீட்டு எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச் சடலங்களை மீட்பதற்கு அரசாங்க நிறுவனங்களினாலேயே உதவ முடியாமல் இருக்கிறது

சிங்களக் குண்டர்கள் தீவுமுழுவதிலும் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது இப்படியான தாக்குதலை நடத்தக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன

கொழும்பில் மட்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

## 4 பஸ்களும் சாரதிகளும் விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பஸ்களும் அதன் சாரதிகளும் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நேற்றும் கொழும்பு-யாழ் பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் கொழும்பில் இருந்து சில மினிபஸ்கள் காட்டுப் பாதைகள் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பஸ்கள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே தொடர்ந்தும் கொழும்பு யாழ் பஸ் சேவைகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சர்வகட்சி மாநாடு; சுதந்திரக் கட்சியின் முடிவு இன்று தெரியும்

கொழும்பு, ஜூன் 18

இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதா? இல்லையா? இதுபற்றி முடிவு செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காரியக்கமிட்டி இன்று (புதன்கிழமை) கொழும்பில் கூடுகிறது.

இதனிடையில் இலங்கை மக்கள் கட்சி சர்வகட்சி மாநாட்டில் கலந்து

(4-ம் பக்கம் பார்க்க)

முசசுக்முரளி



அரசாங்கமும், எதிர்க்கட்சியளும் ஒண்டு சேர்ந்து ஒண்டுமே சரியாய் நடந்ததாய் சரித்திரம் இல்லேத்தானே...

## இலங்கை இனப்பிரச்சினை இந்தியாவின் நிலைக்கு பிரிட்டன் முழு ஆதரவு

லண்டன், ஜூன் 17

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் இந்தியாவின் முக்கிய பங்கை பிரிட்டன் தொடர்ந்து ஆதரித்து வருகிறது.

இப்படி கடந்த செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் நாடாளுமன்ற விவகாரத்துணை மந்திரி ஜிம் ஹொகர் அறிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி தொழிற்கட்சி எம். பி. ரொபர்ட் வாரன் பேசினார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண பிரதமர் ராஜீவ் காந்தி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார் அவரின் முயற்சிகளுக்கு பிரிட்டன் பூரண ஆதரவு வழங்க வேண்டும். இல்லாவிடில் பாரதூரமான விளைவுகள் அப்பிராந்தியத்தில் ஏற்படும்

இப்படி அந்த தொழிற்கட்சி எம். பி. கூறினார்.

பதிலளித்துப் பேசுகையில் நாடாளுமன்ற விவகாரத் துணை அமைச்சர்,

"அமைதித் தீர்வைக் காணும் எந்த முயற்சிக்கும் பிரிட்டனின் பூரண ஆதரவு உண்டு.

இப்பிராந்தியத்தில் இந்தியா சிக்கலான பணியில் ஈடுபட்டுள்ளது இந்தியாவின் இந்த முயற்சிகளுக்கு பிரிட்டனும் தன்னால் இயன்ற உதவிகளை வழங்கும்" — என்று சொன்னார். (உ-எ)

## இராணுவம் வெளியே வர போராளிகள் தாக்குதல்

### பலாலியில் சம்பவம்

பலாலி, ஜூன் 18

நேற்று பலாலி இராணுவ முகாமில் இருந்து பலாலி விமான நிலைய ஓடுபாதை வழியாகக் கட்டுவன்— குரும்பசிட்டி பக்கங்களை நோக்கி சிப்பாய்கள் வெளியே வந்தனர்.

எனினும் போராளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து அவர்கள் முகாமுக்குத் திரும்பினர் சிறிது நேரம் இருசாராரும் மோதிக் கொண்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

நேற்றுக்காலை 8-30 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் கட்டுவனை நோக்கி வந்தனர்.

கட்டுவனில் சென்ரியில் இருந்த விடுதலைப் புலிகள் 'கிரனேட்' குண்டெறிந்தனர்.

அதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த விடுதலைப் புலிகள் துப்பாக்கி மூலம் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதே நேரம் ஏற்கனவே தயார் நிலையில் 'புளொட்' டினால் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் சிலிண்டர் குண்டுகளும் வெடிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர்.

இச்சம்பவங்களின் போது ஹெலிக்கொப்

(4ம் பக்கம் பார்க்க)

### புதிய நட்பு வருமா? :

## அரசு - எதிரணி கூட்டாக

### தீவிரவாத எதிர்ப்புப் பிரசாரம்

கொழும்பு, ஜூன் 18

எதிர்க்கட்சியினரையும் சேர்த்துக்கொண்டு நாடு முழுவதிலும் தீவிரவாத எதிர்ப்புப் பிரசாரக் கூட்டங்களை நடத்தும் திட்டம் ஒன்று பற்றி அரசாங்கத் தலைவர்கள் ஆராய்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இதனை நடைமுறைப் படுத்தும் முன்னர் கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து அரசு வட்டாரங்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுக்கு அப்பால் லொறிகள் செல்ல

### பொலீஸ் அனுமதி தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் தனியார் லொறிகள் இனிமேல் யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்தில் அனுமதி பத்திரம் பெற்றிருந்தால் மட்டுமே ஆனையிறவுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படும்.

அனுமதி பெறாத லொறிகள் ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்படும்.

இப்படி ஒரு புதிய உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் தனியார் லொறிகளுடன் இனிமேல் மாவட்ட பொலீஸ் அதி

(4ம் பக்கம் பார்க்க)

## பஸ்சேவைகள் ஸ்தம்பிக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 18

டீசல் தட்டுப்பாடு, யாழ் குடா நாட்டு பஸ் சேவைகளை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

இதனால் வட பிராந்திய போக்குவரத்துச் சபை, அரச ஊழியர்களுக்காக காலை, மாலையில் இரண்டு பஸ் சேவைகளையும் பாடசாலை பஸ் சேவையையும் மட்டுமே மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் நடத்துகின்றது

டீசல் எடுத்து வர கொழும்புக்கு லொறி ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பியிருப்பதாகப் போக்கு

(4ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18 — 6 — 1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.23 முதல் 5.53 வரை
ராகுகாலம்:
11.53 முதல் 1.23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## தர்மப் பணம்பெற நாள் முழுவதும் தவம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தர்மப் பணம் பெறுவோர் உபதபால் நிலையங்களில் நாள் முழுவதும் தவம் இருந்து அந்தப் பணத்தைப்பெற வேண்டியதாகவுள்ளது

உபதபால் நிலையங்களில் பணம் சேரும் போது தான் இவர்களுக்குத் தர்மப்பணம் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரைக்குள் தர்மப் பணம் வழங்கப்படடாக வேண்டும்.

ஆனால் தபால் நிலையங்களில் இப்போது பணம் சேருவது குறைவு.

அன்றன்றைக்குச் சேரும் பணத்தைத் தான் தர்மப்பணம் பெற வருபவர்களுக்கு உபதபால் நிலையங்கள் வழங்கி வருகின்றன.

அன்றைய தினம் பணம் சேராவிட்டால் அடுத்த நாள் என்றும்—

அடுத்த நாள் சேராவிட்டால் அதற்கு அடுத்த நாள் என்றும் பலதடவைகள் அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

சிறுதொகையைத் தர்மப் பணமாகப் பெறும் ஏழைகள், பெரும்பாலும் வயோதிபர்கள் அதற்காகப் பல நாட்கள் அலைய வேண்டியுள்ளது. (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசோலைகள் வங்கி ஆணைகள் பற்றிய புதுநடைமுறை

## மக்கள் வங்கி சுற்று நிருபம்

பலாலி, ஜூன்.18 அரசாங்க திணைக்களங்களினால் மக்கள் வங்கி தவிர்ந்த ஏனைய வங்கிகளால் பிறப்பிக்கப்படும் கசோலைகள், வங்கி ஆணைகள் ஆகியவற்றை உடனடியாக வரவில் வைத்து சம்பளம் போன்ற கொடுப்பனவுகளை வழங்க மக்கள் வங்கி மறுத்துள்ளது.

இதனால் காசோலை மூலம் சம்பளம் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், கிராமிய வங்கிகள் மூலமும், அரசாங்க திணைக்களங்கள் மூலமும் மாற்றும் அரச உத்தியோகத்தர்கள் சிரமமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக மக்கள் வங்கியின் வட பிரதேச உதவி முகாமையாளரால் சுற்று நிருபம் ஒன்று சகல வாடிக்கை நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வேறு வங்கிகளால் பிறப்பிக்கப்படும் காசோலைகள், வங்கி ஆணைகள் என்பனவற்றை உடன் வரவில் வைத்து மாற்றிக் கொடுப்பதன் மூலம், வேலைப்பழு பன்மடங்காக அதிகரிப்பதாகவும்—

தபால் சேவைகள் சீரற்றிருக்கும் காலகட்டத்தில் வைப்பிலிடப்படும். பிறவங்கிக் காசோலைகள் மூன்று அல்லது நான்கு கிழமைகளுக்குப் பின் தாமதம் ஏற்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகள் தலைமை அலுவலகத்திற்கும் மற்றைய வங்கிகளுக்கும் வட்டிசெலுத்த வேண்டியுள்ளதெனவும் மேற்படி வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிலையால் கீழ்க் கண்டகசோலைகள், வங்கி ஆணைகள் மட்டுமே உடன் வரவு வைப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படுமென வங்கி அறிவித்துள்ளது

1. அரசாங்க திணைக்களங்களினால் சங்கங்களின் பெயரில் பிறப்பிக்கப்படும் மக்கள் வங்கிக் காசோலைகள்.

2. உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் உணவு முத்திரைக் கொடுப்பனவுக்கு வழங்கப்படும் காசோலைகள்.

3. மக்கள் வங்கிக் கிளைகளால் வழங்கப்படும் வங்கி ஆணைகள், கட்டளைகள்

இச்சூழ்நிலையில் சங்கங்கள் கால் வீதம் தரகுத் தொகையைச் செலுத்த சம்மதம் அளிக்கும் பட்சத்தில் தற்போது நடைமுறையில் உள்ள வழக்கத்தைத் தொடர்ந்து அனுமதிக்க தம்மால் ஆலோசிக்கப்படுமெனவும் வங்கி அறிவித்துள்ளது. (இ-119)

## வெற்றிலையின் பயங்கரம்

கொழும்பு, ஜூன்18 வெற்றிலை போடுவது பயங்கரவாதத்திலும் விடப் பயங்கரமானது.

இப்படி சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து சொன்னார்.

கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் அமைச்சர் மேலும் பேசுகையில்.

மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் உள்ள புற்றுநோயாளர்களில் 40 சதவீதமானோர் வெற்றிலை போடுவது காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களே என்றும் கூறினார். (இ-எ)

## வீடுகள் தோறும் நூலகம் தேவை

### சனசமூநிலைய விழாவில் உரை

காங்கேசன்துறை, ஜூன்.18 கல்வி கற்பது பெரிதல்ல. கல்வி அறிவு பாதுகாக்கப்பட பொழுதுபோக்கான நேரத்தில் அறிஞர்களின் நூல்களை படிக்க வேண்டும். அதற்காக வீட்டுக்கொரு நூலகம் உருவாக வேண்டும்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் அம்பாள் சனசமூக நிலையத்தின் சிறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

வைபவத்தில் தலைமை வகித்து பேசுகையில் திரு. க. தங்கலிங்கம் இப்படிக் கூறினார்.

மயிலிட்டி மீன்பிடிப் பரிசோதகர் திரு. ஆ. தேவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்விழாவில் திரு. க தங்கலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

'இன்றைய காலகட்டத்தில் எந்த மூலையில் என்ன நடக்குமோ என்று தெரியாது மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன நடக்கிறது. எமக்கு என்ன நடக்கப் போகிறது என்ற விடயங்களை அறிய வாய்ப்பாக இருக்கும் பத்திரிகைகளை வாசிக்க வேண்டும். அதற்கு எல்லா மக்களுக்கும் இயலாத காரியமாகையால் இதுபோன்ற சனசமூக நிலையங்கள் எங்கும் உருவாக்கப்பட வேண்டும்.—என்றார்.

இதையடுத்து சங்க புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. (உ-68)



கடந்த 8ஆம் திகதி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்ற ''கோப்பாய் சிவம்' எழுதிய ''சைவாலயக் கிரியைகள்'' நூல் வெளியீட்டு விழாவின்போது நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சு இராஜேந்திரக் குருக்கள் நூலாசிரியருக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் வெளியீட்டு விழா அமைப்பாளர் சிவஸ்ரீ அ. நா சோமாஸ்கந்தசர்மா யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக விரிவுரையாளர் நிற்கின்றார். (உ)

## மந்திரங்களைப் போன்று சிவாச்சாரியார்களின் பாவனையும் முக்கியம்

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்.ஜூன் 18 நித்திய பூசைகளின் போது மந்திரங்களைப் போன்று சிவாச்சாரியார்களின் பாவனையும் முக்கியம்.

சிவாச்சாரியார்கள் முத்திரை என்று அழைக்கப்படும் அசைவுகளை ஏற்படுத்திப் பாவனை மூலம் தெய்வ சக்தியை அழைத்து அருள் செய்ய வழிவகுக்கிறார்கள்.

கோப்பாய் சிவம் எழுதிய ''சைவாலய கிரியைகள்'' என்ற நூல்வெளியீட்டு விழாவில் தலைமையுரை ஆற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பதிவாளர் திரு வே. ந. சிவராஜா இவ்வாறுகுறிப்பிட்டார். திருமுறை ஓதுதலுடன் விழா ஆரம்பமாகியது.

திரு சிவராசா தொடர்ந்து பேசுகையில் பரத நாட்டியத்தில் முகபாவனை, கை, கால் அசைவு, கண்ணசைவு, மூலம் பல்வேறு ரசங்களை வெளிப்படுத்துவது போன்று பூசையின் போது சிவாச்சாரியார்கள் முத்திரைகள் என்றழைக்கப்படும் அசைவுகளை ஏற்படுத்திப் பாவனை மூலம் தெய்வ சக்தியை வரவழைக்கின்றார்கள் இது சிவாச்சாரியார்களின் கலை-என்கிறார்.

அடுத்துப் பேசிய சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தமதுரையில்,

நித்திய பூசைகளின் போதும், திருவிழாவின் போதும் திருமுறைகளுக்கு உரிய இடம் வழங்கப்படுதல் வரவேற்கத் தக்கது.

வருங்காலத்தில் தமிழ் வேதம் கோயில்களில் ஓதப்படுதல் இளைஞர்களால் பெரிதும் விரும்பத்தக்கதாக அமையும்-என்றார்.

வடபகுதி சர்வோதய இணைப்பாளர் திரு. க. கதிரமலை நூலின் முதற் பிரதியைப் பெற்றார்.

திரு க. சி. குலரத்தினம், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், வித்துவான். வசந்தா வைத்தியநாதன், பண்டிதர். ச. பஞ்சாட்சர சர்மா ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினார்கள் (உ ⁰)

## பொண்ட் இன்ஸ்ரிரியூட் இலவசவகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்.18 வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட 1986 ஆகஸ்ட் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக கருத்தரங்கும் மாதிரிவினாவிடை வகுப்புக்களும் இலவசமாக நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவை இன்று முதல் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பொண்ட்இன்ஸ்ரியூட்டில் ஆரம்பமாகின்றன.

பொண்ட் இன்ஸ்ரியூட் இவ்வகுப்புக்களையும் கருத்தரங்கையும் நடத்துகின்றது. (இ-எ)

### கந்தளாய் அகதிகளுக்கு நிவாரணம்:

# செஞ்சிலுவை சங்கமே நேரடியாக வழங்கும்

கொழும்பு, ஜூன் 18 கந்தளாய்க்குள உடைப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட ஆஸ்திரேலிய நிதி உதவியை செஞ்சிலுவைச் சங்க அமைப்பே நேரில் விநியோகிக்கும். உணவுப் பொருள்களாக இந்த உதவி வழங்கப்படவுள்ளது

50,000 டாலர் உதவி கந்தளாய் அகதிகளுக்கு வழங்கப்படும் என்று ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் வில்லியம் ஹேய்டன் தெரிவித்தார். (இ-எ)

## வெங்காய அழிவை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் முயற்சி

யாழ்ப்பாணம் ஜூன் 18 யாழ்மாவட்ட வெங்காயச் சிறுபோகச் செய்கையினைத் தாக்கியுள்ள தாள் கோதிப்புழு நோயைக் கட்டுப்படுத்த கமத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் முயற்சிகளை மேற்கொண்டு உள்ளனர்.

உரிய மருந்தை ஏழு தடவைகள் பயிருக்குத் தெளிக்க வேண்டும் நட்டு 5 ஆம், 10 ஆம், 15 ஆம், 20 ஆம், 26 ஆம் 34 ஆம், 44 ஆம் நாட்களில் இம்மருந்தைத் தவறாமல் கண்டிப்பாகப் பாவிப்பது மூலம் இந் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு கமத் தொழில் உத்தியோகத்தர்கள் வெங்காயச் செய்கையாளருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். (உ-9)

## கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன்.18 அரியாலை சனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சி நடைபெற உள்ளது

இன்றும் நாளையும் இப்பொருட்காட்சி வித்தியாலயத்தில் நடைபெறும்.

18 ஆம் திகதி காலை 9 மணிக்கு பொருட்காட்சி திறந்து வைக்கப்படும்;

பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார் (இ-5).

## அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூன்.18 அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் திரு. கா. விசுவலிங்கத்தின் மறைவு குறித்து வட்டுசிவன்கோவிலடிபிரசைகள் குழு, அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. (இ-எ)

## மண்டைதீவில் கைதானோரை விடுவிக்க கோரிக்கை

மண்டைதீவு ஜூன் 18 மண்டைதீவில் கடந்த வாரம் சீருடையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருக்கும் அப்பாவி இளைஞர்களை உடன் விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குக

மண்டைதீவு பிரசைகள் குழு யாழ் அரசாங்க அதிபரை மேற்கண்டவாறு கோரியுள்ளது

அத்துடன் மண்டைதீவுப் பகுதியிலிருந்து வெளியேறி அகதிகளாக வெளியிடங்களில் தஞ்சம் புகுந்துள்ள அனைவருக்கும் இலவச நிவாரண உதவியாக அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்களை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும்.

மண்டைதீவு பிரஜைகள் குழு யாழ் அரசாங்க அதிபரை கேட்டுள்ளது (இ - 88

பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கைதடி நாவற்குழி என்னுமிடத்தைச் சேர்நத காலஞ்சென்ற அச்சலிங்கம் வியாசன் என்பவரின் மரண சாதனம் எழுதப்பட்ட மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
மரணசாதன ) இல.
நியாயாதிக்கம்) ரி/278
பொன்னையா
சிவசுப்பிரமணியம்
சித்தன்கேணி
மனுதார்

எதிராக

1 பொன்னையா சிவசுப்பிரமணியம் பெண் குமுதினி சித்தன் கேணி
2 அச்சலிங்கம் வியாசன் கைம்பெண் சகுந்தலா கிளாக்சர் ஒழுங்கை, அச்சுவேலி.
3 கந்தையா பரராஜசிங்கம் கைம்பெண் சாரதா, சித்தன் கேணி
4. மாணிக்கவாசகர் பொன்னம்பலம் கைம்பெண் மகேஸ்வரி, சித்தன்கேணி.
5. ஆறுமுகம் குமாரசாமி கைம்பெண் சரோஜினி, மாரீசன் கூடல், இளவாலை

எதிர்மனுதார்கள்,

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ஆம் ஆண்டு யூலை மாதம் 2-ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 11ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி. இராமச்சந்திர ஐயர்
பதிவாளருக்காக

வரைவு:
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## நாட்டில் ஒரு லட்சம் சிங்கள அகதிகள்

### கோட்டே விகாராதிபதியின் கவலை

கொழும்பு, ஜூன் 18 இலங்கையைச் சிங்கள பௌத்த நாடு என்று பெரிதாகக் கூறுகின்றோம் ஆனால் ஒரு லட்சம் பௌத்த சிங்களவர்கள் முகாம்களில் அகதிகளாக உள்ளனர்.

இதே நேரத்தில் நாட்டை இந்த நிலைக்குக் கொண்டுவந்த தலைவர்களுக்கு ஆசி கூறி பிரித் ஓதுவதில் நாயக்கத்தேரர் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

கோட்டே விகாராதிபதி மடேகால் வவசொரத தேரர் மேற்கண்டவாறு சொன்னார்.

நாட்டின் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று இலங்கை அரசுத் தலைவர்கள் இந்தியாவையும் தமிழர்களையும் தான் கேட்கின்றனர்.

சிங்களவர்களைக் கேட்பதாக இல்லை. என்றும் சொரத தேரர் சொன்னார்.

வண. ஹெடிகெல்லை பன்னிய திஸ்ஸ நாயக்க தேரர் பேசுகையில்.

மறுநாள் நித்திரையில் இருந்து உயிருடன் எழும்புவோமா என்பது இன்று சந்தேகத்தில் உள்ளது என்று சொன்னார்.

கோட்டேயில் நடந்த மத வைபவம் ஒன்றில் இவர்கள் பேசினார்கள். (உ-எ)

## மண் கும்பான் தெரிவு

வேலணை, ஜூன் 18 வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அல்லைப்பிட்டி கிராம சேவகர் பிரிவிலுள்ள மண்கும்பான் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கிராமத்திற்கு இத் திட்டத்தின் கீழ் வீட்டுத் திட்டம், குடிதண்ணீர் வசதி, மருத்துவ வசதி, வீதிப் போக்குவரத்து, மின்சார வசதிகள் போன்றவைகளை செய்து கொடுப்பதற்கு வேலணை உதவிஅரசாங்க அதிபர் முயற்சி செய்து வருகிறார்.

இத் திட்டங்கள் [illegible] அதிகார அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படும்

## கோழிகளால் ஏற்பட்ட மரணம்

பலாலி, ஜூன் 18 கோழிகளில் ஒன்றைக் காணவில்லை என மதுபோதையில் தேடிய 11 பிள்ளைகளின் தந்தை ஒருவர் தனது எண்ணுக்கணக்குப் பிழைத்து விட்டதை பிள்ளைகள் நிரூபித்ததும் கிருமிநாசினி அருந்தி தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

வயாவிளானில் உள்ள ஒரு குறிச்சியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

தனது வீட்டு வருமானத்தைப் பெருக்க எண்ணி கோழி வளர்க்க விரும்பினார் ஒருவர். சம்பவதினம் பத்து கோழிகளை வாங்கிவந்து காலையில் வீட்டில் அடைத்து விட்டு வேலைக்குச் சென்றார்.

பிற்பகல் மதுபோதையில் வீட்டிற்கு வந்து கோழிகளை எண்ணிப்பார்த்தார்.

ஒன்பது கோழிகள் மட்டுமே இருப்பதாகவும், ஒரு கோழிக்கு என்ன நடந்ததெனவும் விசாரணையில் ஈடுபட்டார்.

எல்லாக் கோழிகளும் நிற்பதாக மனைவியும், பிள்ளைகளும் திரும்பத்திரும்பக் கூறியும் அவர் கேட்கவில்லை.

தனது எண்ணிக்கையில் ஒன்பது மட்டும் நிற்பதாக அடம்பிடித்தார்.

தகப்பனும், பிள்ளைகளும் சேர்ந்து கோழிகளை எண்ணத் தொடங்கினர்.

பத்துக் கோழிகளும் நின்றால் தான் கிருமிநாசினி அருந்துவதாகவும், இல்லையெனில் பிள்ளைகள் அருந்தவேண்டுமெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது- பிள்ளைகள் இதனைப் பகிடியாகவே எடுத்துக்கொண்டனர்.

எண்ணிக்கையில் பத்துக் கோழிகளும் நிற்பது நிரூபிக்கப்பட்டது. உடனே அவர் கிருமிநாசினியை எடுத்து அருந்திவிட்டார்.

[illegible] எடுத்துச செல்ல எடுக்கப்பட்ட முயற்சியும் அவரால் தடுக்கப்பட்டதாம். (இ - 119)


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா கொண்ட (Bond)
ரிக்கட் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

குறிப்பு:
பிரான்சு, ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் 25-06-86க்கு முன் தொடர்பு கொள்ளவும்.



பம்பாய் வெங்காய நாற்று விற்பனை

திடகாத்திரமான பயிர் விவசாய அதிகாரிகள் உத்தரவாதம்

தொடர்புகொள்ளுக;

அராலி பம்பாய் வெங்காய
உற்பத்தியாளர் சங்கம்.



## பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● சவூதி அரேபியா

(1) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.
(2) சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர் பதவிக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
(3) செல்ல விரும்புவோர் யூன் 25ஆம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.
(4) எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு; N. BALA
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
பி.கு வழி இல: (764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மையை உணர்ந்து ஊறிய உள்ளம் உடையவரை வெளிக் குழறல்கள் பாதிக்க மாட்டா.

—ஜேம்ஸ் அலன்

உதயன்

உண்மை - அச்சமின்மை - நடுநிலைமை

இல, 16 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
18.6.86
தொலைபேசி 24805
22078
பெ. 28

## குட்டை குழம்புகிறது

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவை ஒதுக்கி விடுவது போல நடந்து கொண்ட இலங்கை, அதனுடன் ஒட்டுறவு போல இப்போது காட்டிக் கொள்கிறது.

பேச்சுவார்த்தை ஒன்று நடந்தால் அன்றி விளக்கங்கள், வியாக்கியானங்கள் தரமுடியாது என்று முன்னர் இலங்கை அரசு கூறிவந்தது. இப்போது இரகசிய விளக்கங்கள், வியாக்கியானங்களை ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமருக்கு அனுப்பி இருக்கிறார்.

அது மட்டுமன்றி, இனப்பிரச்சினை சம்பந்தமாக உள்நாட்டில் வட்டமேசை மாநாடும் கூட்டப்படுகிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏனைய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகவே அது நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

மேலும்—

தமிழ்ப் போராளிகளுடன் பேசுவதற்கு இடதுசாரிகளின் உதவியை நாடும் மற்றொரு முயற்சியும் உண்டு. அதன் மூலம் யுத்த நிறுத்தத்தை உருவாக்கிச் சமாதானப் பேச்சுக்கு வழி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யப்போவதான முணுமுணுப்பும் கேட்கிறது.

இவற்றை எல்லாம் நோக்கும் போது இனப்பிரச்சினை தீர்வதற்கான ஒரு சூழ்நிலை வேகமாக உருவாகி வருகிறது என்று எவருக்கும் எண்ணத் தோன்றும்.

இவற்றின் மத்தியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் ஆரம்பமாகி இருக்கிறது. உதவி எதையும் வழங்குவது குறித்துத் தீர்மானிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு நாட்டின் அரசியல் நிலைமை தீவிரமாக எடை போடப்பட்டே உதவி வழங்கப்படும்.

அதனை ஒட்டித் தான், பாதுகாப்பு அமைச்சர் லலித், இனப்பிரச்சினைக்கு இந்த முறை தீர்வு உறுதி என்றவாறு ரூபவாஹினியில் பேட்டி நடத்தியிருக்கிறார். கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் தத்தமது நாட்டுக்கு அமைச்சரை மேற்கோள் காட்டி அரசுக்குச் சாதமாக அறிக்கை அனுப்ப வேண்டும் என்பதற்கான நல்ல தந்திரம் அந்தப் பேட்டி!

இலங்கை ஜனாதிபதி ரஷ்யாவுக்குச் சுகமாகப் போய் திரும்புவதற்குச் சாதகமாகவும் லலித்தின் பேட்டியும், இந்தியாவுக்கு அனுப்பிய இரகசிய விளக்கங்களும் அமையலாம்.

நாட்டில் பிரச்சினை தீயாக எரியும் போது, நாட்டின் தலைவர் ரஷ்யாவுக்குப் போகவேண்டிய அவசரம் என்ன?

இத்தனை காலமாக பிரச்சினையைக் கையாண்ட இந்தியாவின் தலைவரை நேரில் சந்தித்தால் சிலவேளை நல்ல தீர்வுக்கு வழி பிறக்கலாம். ரஷ்யாவுக்கு போவதால் இனப் பிரச்சினை விடயத்தில் என்ன ஆகப்போகிறது?

மேற்கு நாடுகளிடம் ஆயுத உதவி, நிதி உதவி, என்பனவற்றைப் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டு ரஷ்யாவுக்குப் போய் வர வேண்டும் என்று விழுந்தடிப்பது ஏன?

இந்தியாவை வேண்டாம் என்ற தோரணையில் நடந்துவிட்டு அதன் நட்பு நாட்டுக்குப் போவது ஏன்? இது யார் சொல்லி நடக்கும் நாடகம்? என்ன நோக்கத்திற்காக? எதுவுமே புரியாத புதிர்! மர்மத்திலும் மர்மம்!!

அங்கொரு காலும் இங்கொரு காலுமாக அரசாங்கம் குழப்ப நிலையை உண்டாக்கத்தானே!

பிரச்சினையைத் தீர்க்க மனவிருப்பத்துடன் செயலாற்றினால், அரசாங்கம் நாள் தப்பாது வடக்கு, கிழக்கில் படைகளை குவிப்பது ஏன்? முகாம்களை அதிகரிப்பது ஏன்?

அது மற்றொரு மாயநிலை; மர்ம நிலை.

மொத்தத்தில்: இந்தியாவுக்கு இரகசிய விளக்கம், உள்நாட்டில் வட்டமேசை மாநாடு, தமிழ்ப் போராளிகளுடன் இடதுசாரிகள் மூலம் பேசுதல், ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் ஆகியன குட்டையை மேலும் குழப்புவதற்கும், உதவி புரியும் நாடுகளின் அனுதாபத்தைப் பெறுவதற்கும் தானே அன்றிப் பிரச்சினையைத் தீர்க்க அல்ல என்றே கருதவேண்டி உள்ளது.

## விஞ்ஞானக் கல்வி எப்படி அமைய வேண்டும்?

### முன்னாள் அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

உண்மையை அறிவதில் விஞ்ஞானிகள் ஈடுபட வேண்டும். லோகாயுத, நல்லொழுக்க, ஆத்மீக உண்மைகளை வெளிப்படுத்தக் கூடியதாக விஞ்ஞானக் கல்வி அமைய வேண்டும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ். கந்தசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மத்திய கல்லூரியின் விஞ்ஞான தினக் கொண்டாட்டத்தில் திரு. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார்.

கடந்த திங்கட்கிழமை விஞ்ஞான தினம், கல்லூரியின் உயர்தரவிஞ்ஞான மாணவர் மன்றத்தினால் கொண்டாடப்பட்டது.

மன்றத் தலைவர் திரு தி. கிருபராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம், உப போஷகர் திரு. பி. கதிர்காமநாதன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திரு. க. சந்திரமௌலி, திரு வை சுத்தானந்தன் ஆகியோரும் பேசினர்.

மன்ற வெளியீடான 'மத்திய ஆய்வாளன்' நாலும் அன்று வெளியிடப்பட்டது.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவருக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ்களை வழங்கினார். (இ-எ-5)

தென்னுபிரிக்க சிக்கல்

# காமன்வெல்த் பிளவுபடும் ஆபத்து

லண்டன், ஜூன் 17

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக பிரிட்டன் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை சர்வதேச ரீதியாக வலுவடைந்து வருகின்றது இதனால் காமன்வெல்த் பிளவுபடும் ஆபத்து உருவாகி வருகிறது

பிரிட்டன் தனது போக்கை மாற்றாமல் இந்த நிலைமை தொடருமானால் காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் இருந்து விலகிவிடப் போவதாக கானா அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஸாம்பியாவும் இதே நிபந்தனையின் அடிப்படையில் காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகப்போவதாக அறிவித்தது தெரிந்ததே.

காமன்வெல்த் மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும்பொழுது தென் ஆபிரிக்க பிரச்சினையை முன்வைத்து அங்கத்தவ நாடுகள் பிரச்சினை கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் ஆபிரிக்க நாடுகளின் கோரிக்கைகளுக்கு பிரிட்டன் செவிசாய்க்காது போனால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என ஆஸ்திரேலியப் பிரதமர் எச்சரித்துள்ளார் (இ-ஒ)

## லெபனனில் பெற்றோல் தட்டுப்பாடு

பேருட், ஜூன் 17

லெபனனில் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

லெபனனில் உள்ள வாகன உரிமையாளர்கள் பெற்றோல் பெறுவதற்காக வன்செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

அயல் நாடுகளில் இருந்து லெபனன் ஊடாக பயணம் செய்பவர்கள் கூட துப்பாக்கி முனையில் தமது வாகனங்களிலுள்ள பெற்றோலைப் பறிகொடுக்கின்றனர்.

## 15 ஆண்டுகளுக்கு விண்வெளி ஆயுத உற்பத்தி வேண்டாம்

### ரஷ்யத் தலைவர் கோரிக்கை

மொஸ்கோ, ஜூன் 17

அணு ஆயுத பாவனையைக் குறைத்துக் கொள்ள முன்வருவதாகக் கூறிக்கொள்ளும் ரஷ்யாவும் அமெரிக்காவும் பதினைந்து ஆண்டுகளுக்கு விண்வெளி ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ரஷ்ய நாட்டு அதிபர் திரு கோர்பசேவ் அமெரிக்காவை கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஆயுதங்களை குறைத்துக் கொள்வதில் பரஸ்பர உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கு வசதியாக ரஷ்யா புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (உ-ஒ)

## கம்யூனிஸ் வெற்றி

கல்கத்தா, ஜூன் 17

மேற்கு வாங்காளத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி 70 சதவிதமான இடங்களைப் பிடித்துக் கொண்டது.

மொத்தம் 75 மாநகர சபைகளில் 11 மாநகர சபைகளையே இந்திரா காங்கிரஸினால் வெல்ல முடிந்தது. (உ-எ)

## சொலிடாரிட்டி ஸ்தாபக உறுப்பினர் 30 பேருடன் கைது

ஹர்ஸோ, ஜூன்.17

போலந்து தேசத்தில் 1980 ஆம் ஆண்டு உருவான 'சோலிடாரிட்டி இயக்க'த்தின் ஸ்தாபன உறுப்பினரான திருமதி அனோ வலண்டனோவிச்சும் ஏனைய முப்பது ஆதரவாளர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருமதி வலண்டனோவிச் 1980 ஆம் ஆண்டு லெனின் கப்பல் கட்டும் தளத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

இது பலரால் கண்டனத்துக்குள்ளாகியதை தொடர்ந்து 'சோலிடாரிட்டி இயக்கம்' அமைக்கப் பெற்று பிரபலமாக வளர்ந்தது

கைது செய்யப்பட்ட திருமதி அனோ மீதான குற்றச்சாட்டுகள் இதுவரை விவரமாக அறிவிக்கப்படவில்லை. (உ-ஒ)

## அமைச்சரின் மக்ளுக்கு போதை வஸ்து

லண்டன் ஜூன் 17

பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவரின் மகளுக்கு ஹெறோயின் போதை வஸ்து வழங்கி வந்ததாக, லண்டன் நீதிமன்றம் ஒன்றில் ஒரு ஆணும் பெண்ணும் கூறினர்.

பிரிட்டிஷ் வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் ஷெனின் புதல்வி செல்வி ஷெனா ஒக்ஸ்போட் பல்கலைக் கல்லூரி விடுதியில் கடந்த புதன்கிழமை இரவு இறந்து இருக்க கண்டு பிடிக்கப்பட்டார்.

அது சம்பந்தமான பொலீஸ் விசாரணையின் போதுதான் ஒரு பெண்ணும் ஆணும் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

இறப்பதற்கு முதல் நாளும் அமைச்சரின் மகளுக்கு ஹெறோயின் போதை வஸ்து விநியோகித்ததாக இருவரும் தெரிவித்தார்கள்.

அமைச்சரின் இறந்து போன மகள், இறுதிப் பரீட்சையை எடுத்திருந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஆப்கான் கெரில்லா தலைவர்கள் வெள்ளை மாளிகையில்

வாஷிங்டன், ஜூன்.17

ஆப்கானிஸ்தானின் நான்கு கெரில்லாத் தலைவர்கள் வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி றீகனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் ஆப்கானிஸ்தான் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் ரஷ்ய துருப்புக்களை விரட்டியடிக்க கெரில்லா இயக்கங்கள் முயற்சித்து வருகின்றன.

இந்த முயற்சிக்கு அமெரிக்கா பெரிதும் உதவும் என றேகன் தெரிவித்ததாக அவதானிகள் தகவல் தெரிவித்தனர். (உ-ஒ)

வெளி உலகில்

## ஆறு சீக்கியர் கனடாவில் கைது

ஒட்டாவா, ஜூன்17

இந்தியாவில் பல பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மூலகாரணமாக இருந்தவர்கள் என்று கூறப்படும் ஆறு சீக்கியர்களை கனடா பொலீஸார் கைது செய்தனர்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான போது, இந்திய நாடாளுமன்றத்திற்கு முன்பாக காரொன்றை குண்டு வைத்து தகர்த்ததாகவும் அதன் மூலம் இந்திய நாடாளுமன்ற கட்டிடத்தைச் சிதைக்க முயன்றதாகவும் தெரிவித்தனர். (ஒ)

## ஆறுவது சமுத்திரம்

புளோரிடா, ஜூன்17

உலகிலே மிகப் பெரிய மீன்வளர்க்கும் தொட்டி (அக்குவாரியம்) அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் ஓர்லந்தோ நகரில் உள்ளது.

600 மீட்டர் நீளமான தொட்டி இது 71 மீட்டர் ஆழம் கொண்டது. 4,000 மீனினங்கள் இத்தொட்டியில் வளர்க்கப் படுகின்றன.

'ஆறுவது சமுத்திரம்' என்று இது வர்ணிக்கப்படுகிறது. (உ-எ)

## நகை மீட்பு

காஞ்சிபுரம் ஜூன் 17

காஞ்சிபுர வரதராஜா சுவாமி கோவில் பெருந்தேவிதாயார் சந்நிதானத்திலிருந்து கடந்த மாதம் களவாடப்பட்ட பெருந்தொகையான ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெருந்தேவியின் திருமாங்கல்யம் சிதைவு பெறாத நிலையிலும் மற்றைய ஆபரணங்கள் பல உருக்கப்பட்ட நிலையிலும் பொலீஸார் மீட்டனர். (உ—ஒ)

## விளையாட்டுத்துறை அமைச்சர்கள் மாநாடு

சியோல், ஜூன்17

மண்டலசார்பற்ற நாடுகளின் விளையாட்டுத் துறை அமைச்சர்களின் இரண்டாவது மாநாடு வடகொரியாவில் அடுத்த மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ)

## பாடசாலை அபிவிருத்திக்கு உண்டியல் மூலம் நிதி

### கல்விப் பணிப்பாளர் ஆலோசனை

காங்கேசன்துறை, ஜூன்.18

இன்றைய காலகட்டத்தில் அரசையோ திணைக்களத்தையோ பாடசாலை அபிவிருத்திக்கு எதிர்பார்த்துப் பயனில்லை. எமது முன்னோர் ஆலயங்களுக்கு உண்டியல் மூலம் நிதி சேகரித்துக் கொடுத்தது போல பெற்றோர்கள் உண்டியல் வைத்துப்பணம் சேர்த்து பாடசாலை அபிவிருத்திக்கு உதவவேண்டும்.

இப்படி ஆலோசனை கூறினார். வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம்.

தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் விஞ்ஞான கைப்பணி உபகரணப்பொருட்காட்சியும் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. ச வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த இவ் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திரு. இரா. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதுடன் மட்டும் தமது கடமை முடிந்து விட்டது எனக் கருதக் கூடாது பாடசாலையிலும் அவர்கள் என்ன செய்கின்றார்கள் என அவதானிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் இளைப்பாறுவதில் அக்கறை செலுத்தாமல் எதிர்கால சமுதாயத்தை வளம்படச் செய்ய வேண்டும் என்றார்.

நிறுவியவர் நினைவுப் பேருரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி கலாதேவி பொன்னம்பலமும் பரிசளிப்புப் பேருரையை தெல்லிப்பளை ப. நோ. கூ. ச தலைவர் திரு. சிவமகாராசாவும் நிகழ்த்தினார். (இ-ஒ)

## மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர்

### சேவை நலப் பாராட்டு விழாவில் அதிபர் உரை

வட்டுக்கோட்டை, ஜூன் 17

கற்பித்தல் துறையிலே விற்பன்னராக விளங்கியது மாத்திரமன்றி சமுதாய அபிவிருத்தி துறைகளிலும் நிறைந்த அனுபவம் பெற்றவராக இருந்து சமூகத் தொண்டும் செய்து மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்ற திரு தேவகடாட்சம் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது எமது கல்லூரிக்கு ஒரு பேரிழப்பாகும்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 36 வருடங்கள் ஆசிரியராகவும் 3 வருடங்கள் பிரதம பாடசாலை அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு உ. ந. தேவகடாட்சத்திற்கு நடைபெற்ற சேவை நலம் பாராட்டு விழாவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் மாணவர் அவைத் தலைவர் செல்வன் ஜி ரி. திலகன் தலைமையில் இப்பாராட்டுவிழா நடைபெற்றது.

அதிபர் திரு. கதிர்காமர் தொடர்ந்து உரையாற்றும்போது;-

கல்லூரியிலுள்ள சகல அமைப்புக்களிலும் முக்கிய பதவிகள் வகித்து திறம்பட இயக்கிவந்த ஆசிரியர் தேவகடாட்சத்தின் சேவை கல்லூரியின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்ததை நாம் என்றுமே மறக்கமுடியாது.

ஆசிரியர்கள் அனைவரும் இவரைப் போன்று சகல துறைகளிலும் ஈடுபட வேண்டும்.

மாணவர்களதும் கல்லூரியினதும் வளர்ச்சிக்குத் தொண்டாற்ற வேண்டும். இவரைப் போன்று எடுத்துக்காட்டான ஆசிரியர்களாகத் திகழவேண்டும்.

இப்படி அவர் குறிப்பிட்டார்.

செல்வன் நோபிள் சின்னத்தம்பி பாராட்டுப் பத்திரத்தை வாசித்தளித்தார்.

மாணவன் செல்வன் எஸ். அகஸ்தீன், மாணவி செல்வி எஸ். சாந்தினி ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

ஆசிரியர் திரு ... [illegible] ... லூரையும் நன்றியும் கூறினார். (உ-ஒ-161)

## வீதி திருத்தம்

இடற்புலம் அச்சுவேலி வீதி பலகாலமாக திருத்தப் படாமல் இருந்து வந்தது

இதை யாழ் அரச அதிபருக்குத் தெரிவித்த இடற்புலம் இளைஞர் மன்றத்தின் நடவடிக்கை ... [illegible] ... திருத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (5-ஒ)



செம்மொழி

குறள்:
அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

பொருள்:
ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறுதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங் கூறாமல் இருக்கின்றான் என்று சொல்லப்படுதல் இல்லை

## அகதிகளுக்கு இலவச மருந்து

உடுவில், ஜூன் 18

சொந்த மண்ணிலேயே அகதிகளாகி நிற்கும் எமக்குத் தேவையான மருந்துகளை இலவசமாக அளிக்கும் சுன்னாகம் பிரசைகள் குழுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தனியார் பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் எம். யோகவிநாயகர் கந்தரோடை அகதிகளுக்கான இலவச மருந்து விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி அகதிகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனையும் மருத்துவினியோகத்தினையும் சுன்னாகம் பிரசைகள் குழு ஏற்பாடு செய்திருந்தது. (இ-ஒ-27)

கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்

## யாழ். செயலகத்தில் கையொப்பமிடுவதற்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ் செயலகத்தில் கையொப்பமிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கு பணியாற்றிவரும் அரச ஊழியர்கள் யாழ். செயலகத்தில் இதுவரை கையொப் மிட்டு வந்தனர்.

திங்கட்கிழமையும் கையொப்பம் இடுவதற்காக சுமார் 150 கிளிநொச்சி அரச ஊழியர் யாழ். செயலகம் சென்றனர்.

அச்சமயமே அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆனையிறவுத் தடுப்பு முகாமில் தடை இருந்த காலத்தில் யாழ் செயலகத்தில் கையொப்பம் வைக்க கிளிநொச்சி அரச ஊழியர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இப்போது ஆனையிறவில் தடை இல்லை. ஆகவே எப்படியாவது அரச ஊழியர் கிளிநொச்சிக்கு போய்த்தான் ஆக வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி அரச ஊழியருக்கு யாழ். செயலகத்தில் வைத்து திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்டது (உ-எ)

## செங்குந்தா இந்து பழைய மாணவர் முயற்சி

யாழ்ப்பாணம் ஜூன் 18

திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியின் பொன்விழா இந்த ஆண்டு இறுதியில் கொண்டாடப்படவுள்ளது.

முன்னாள் அதிபர் அமரர் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக புதிய தோர் நூல் நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் கல்லூரியின்பழைய மாணவர் சங்கம் ஈடுபட்டிருக்கிறது.

பாடசாலையுடன் தொடர்புடைய பெரியார்களைக் கௌரவிக்கும் முகமாககல்லூரிக்குகாணிகளை அன்பளிப்பு செய்த இளையதம்பி, முதலாவது அதிபர் முத்துக்குமாரசாமி, இந்து போர்ட் இராஜரட்ணம், நீண்ட காலம் அதிபராக பணிபுரிந்த கணபதிப்பிள்ளை ஆகியோரின் பெயர்கள் கல்லூரியின் இல்லங்களுக்கு சூட்டப்பட்டுள்ளன

இந்த ஆண்டில் கல்லூரியில் புதிதாக உதைபந்தாட்டக் குழு ஒன்றினையும் உருவாக்க பழைய மாணவர் ஒன்றியம் முயற்சி எடுத்து வருகிறது (உ-10)

## சூழல் தினம் நடைபெற்றது

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சூழல் தினம் கொண்டாடப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையும், கல்வி மூலவள நிலையமும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

உதவி அரசாங்க அதிபர் திரு க. துரைராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவியரின் விவாதங்கள் இடம் பெற்றன. (இ-ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிநாட்டுப் பிரயாணம்**

★ துரித ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-confirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்

நம்பிக்கையைப் பெற்றவர்கள்

**Mack Commonications & Travels**

1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

# உதயன்

18 – 06 – 1986 புதன்கிழமை

**ரெலிபோன் ரெலெக்ஸ்**

24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)

அமைதியான, பாதுகாப்பான இடம்.
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking

**Mack Communications & Travels**

1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 2479, 24836

## போராட்டம் முடிந்தாலும்

# பொருளாதாரம் சீரடைவதற்கு 10 வருடம் எடுக்கும்

## ரொனியின் கவலை

கொழும்பு, ஜூன் 18

தீவிரவாதிகளின் போராட்டம் முடிவுக்கு வந்தாலுங்கூட, நாட்டின் சீர்குலைந்த பொருளாதாரம் மீண்டும் பழைய நிலையை அடைய அதன் பின்னர் குறைந்தது பத்து ஆண்டுகள் பிடிக்கும்.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

திரு டி மெல் மேலும் சொன்னதாவது:

இலங்கைக்கு உதவும் மேற்கு நாடுகளின் கூட்டத்தில் நிதி உதவிபெற நாம் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்தினால் நாட்டுப் பொருளாதாரத்தில் நான்கின் ஒரு பங்கு குறைந்து விட்டது.

வெளிநாட்டுச் செலாவணி சேமிப்பு, வெளிநாட்டு முதலீடு ஆகியவை குறைந்து வருகின்றன.

வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரித்து வருகிறது. இராணுவச் செலவும் கடன் பளு அதிகரிப்பதுமே இதற்குக் காரணமாகும்.

இருண்ட எதிர்காலம் தான் எதிர்நோக்கியுள்ளது. ஒளிக்கீற்றைக் காண முடியவில்லை. அந்த யுத்தம் நாளை முடிந்தாலும் சீர்குலைந்த பொருளாதாரத்தைச் சீர்செய்ய குறைந்தது பத்தாண்டு காலம் பிடிக்கும்.

உல்லாசப் பிரயாணத் துறையினால் வருமானம் 40 சத வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

வெளிநாட்டு முதலீடு வருவதாக இல்லை முன்னர் வெளிநாட்டு முதலீடு சம்பந்தமான விண்ணப்பங்கள் மாதம் 30, 40 கிடைக்கும் இப்போது மாதம் ஒன்றுக்கு 5 தொடக்கம் 8 வெளிநாட்டு முதலீட்டு விண்ணப்பங்கள் தான்வரும்.

நாட்டுப் பொருளாதாரம் இவ்வளவு காலம் இழுபட்டு வந்ததே ஆச்சரியத்தைத் தருகிறது.

இப்போது ஒரே வீழ்ச்சியாக இருக்கிறது இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தான் தாக்குப் பிடிப்போமோ தெரியவில்லை.

இப்படி நிதி அமைச்சர் சொன்னார். (உ-எ)

## விளையாட்டரங்கு

# நாளை யாழ் இந்துவில் உடற்பயிற்சிப் போட்டிகள்

## 1700 மாணவ, மாணவிகள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் நாளை நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள 45 பாடசாலைகளைச் சேர்ந்த 66 அணிகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும்.

13, 17, 19 வயதுப் பிரிவுகளில் வட்டார நிலையில் முதல் தரங்களைப் பெற்ற பாடசாலை அணிகளே இதில் கலந்துகொள்கின்றன.

66 அணிகளைச் சேர்ந்த சுமார் 1700 மாணவ, மாணவிகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நாளை யாழ் இந்து மைதானத்தில் கூடுவார்கள்.

இந்த உடற்பயிற்சிப் போட்டி முடிவில் பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் சாகஸ விளையாட்டு (ஜிம்னாஸ்டிக்) காட்சி ஒன்றும் இடம் பெறும் என்று இப் போட்டிகளை பொறுப்பாக நடத்தி வரும் வட்டாரக் கல்வி அதிகாரி (உடற் கல்வி) திரு. வி கணேசலிங்கம் தெரிவித்தார். (உ-7)

# உலக உதைபந்தாட்டம் மெக்ஸிக்கோவில் 5,000 செய்தியாளர்

மெக்ஸிக்கோ ஜூன் 18

உலககிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிச் செய்திகளை சேகரிக்க 5000 செய்தியாளர்கள் மெக்ஸிக்கோவுக்குள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட 4மாடி நவீன கட்டடம் ஒன்று செய்தியாளர் தங்க என்று ஒதுக்கப்பட்டுள்ளது.

16,000 சதுர மீட்டர் பரப்பளவைக்கொண்டது செய்தியாளர் நிலையம்.

52 போட்டிகள்பற்றிய செய்திகளை 150 நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் வசதி இந்த நிலையத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட 5,000 பத்திரிகையாளர்களில் 2,200 பேர் செய்தியாளர்கள்.

2,300 பேர் டெலிவிஷன் வர்ணனையாளர்கள். 500 பேர் புகைப்படப்பிடிப்பாளர்கள்.

போட்டிகளை நடத்தும் குழு, 4,500 செய்தியாளர்களுக்கும் 400 படப்பிடிப்பாளர்களுக்கும் மெக்ஸிக்கோவினுள் நுழைய அனுமதிமறுத்து விட்டது. (இ-எ)

# பிரேஸில் அணி கால் இறுதிக்கு தெரிவு

மெக்ஸிக்கோ, ஜூன் 17

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் கால் இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு பிரேஸில், ஆர்ஜென்ரினா நாட்டு அணிகள் தெரிவாகின.

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பலம் வாய்ந்த பிரேஸில் அணி எதிர்பார்த்தபடி போலந்து அணியை தோற்கடித்தது. (இந்த ஆட்டத்தில் பிரேஸில் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

அடுத்து வரும் கால் இறுதியாட்டத்தில் இத்தாலி அல்லது பிரான்ஸ் நாட்டு அணியுடன் பிரேஸில் மோத வேண்டியிருக்கும்

இதேவேளை ஆர்ஜென்ரீனா அணி கடும் போட்டிக்கு மத்தியில் பராகுவே அணியை 1-0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்து கால் இறுதியாட்டத்திற்கு தெரிவானது.

இதேவேளை ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டங்களில் மெக்ஸிக்கோ அணி பல்கேரிய அணியை 2-0 என்ற கோல் அடிப்படையிலும் —பெல்ஜியம் அணி ரஷ்ய அணியை 4-3 என்ற கோல் அடிப்படையிலும் தோற்கடித்தன. (உ)

## நீத்தார் பட்டியல்

### கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

நவாலி வடக்கைச் சேர்ந்த க. தில்லையம்பலம், பிரபல வாகன வர்த்தகர் 17-6-86 அன்று காலமானார். இவர் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், சிவகுமாரன் (பிரபல வாகன வர்த்தகர்), சிறிகுமார் (சிங்கப்பூர்), யசோதா (ஆசிரியை நவாலி மகா வித்தியாலயம்), உதயகுமார், நந்தகுமார், வசந்தகுமார், செந்தில்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற வாகன வர்த்தகர் பெரியதம்பி, காலஞ்சென்ற தம்பிராசா, நடேசு, தளையசிங்கம், செல்லத்துரை, அரியரத்தினம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கண்மணி தம்பதியினரின் மகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-6-86) பி.ப. 8-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நி. சிவகுமாரன்

நவாலி,
மானிப்பாய்.

### தமிழர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் 300 தமிழர் வரை கைதுசெய்செய்யப்பட்டனர் ஏற்கனவே ஆயிரக்கணக்கான தமிழர் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் உண்மையான அடக்குமுறை நோக்கத்தையே இந்த நடவடிக்கைகள் தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றன.

இப்படி கூட்டணி தனது அறிக்கையில் கூறியுள்ளது. (உ-எ-2)

### சர்வகட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் தனது தூதுக்குழுவைத் தெரிவு செய்து விட்டது.

அத்தூதுக்குழுவில் கட்சித் தலைவர் திரு. டீ. பி. இலங்கரத்தின, உபதலைவர் திரு. வி. டபிள்யு. குலரத்தின, பொதுச் செயலாளர் திரு விஜய குமாரணதுங்கா ஆகியோர் அங்கம் வகிப்பர். (உ-எ-2)

### இலங்கைக்கு...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

விடுத்திருக்கிறது

**ஜூடித் ஹார்த்**

இதேவேளை — முன்னாள் பிரிட்டிஷ் பெண் அமைச்சரான ஜூடித் ஹார்த், இலங்கை சம்பந்தமான சர்வதேச விழிப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் "இலங்கையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பழைய திட்டங்களுக்கு உதவுங்கள். இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க நிதி உதவி செய்யாதீர்கள்" -என்று கேட்டிருக்கிறார்.

இன்னொரு விஷயத்தையும் திருமதி ஹார்த் நிதி உதவும் நாடுகளுக்கு நினைவுபடுத்தியுள்ளார்.

"இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுத்த பின்னர்தான் இலங்கை அரசும் அமைச்சர்களும் அரசியல் தீர்வு பற்றி பேசத் தொடங்கியுள்ளனர்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

**1250 கோடி கோரல்**

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் 16 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

இம்முறை 1250 கோடி ரூபாய் கடனுதவியை இந்த நாடுகளிடம் இருந்து பெறுவதற்கு நிதி அமைச்சர் ரொனிடிமெல் திட்டமிட்டிருக்கின்றார்.

1985இல் 1,500கோடி ரூபாவை இலங்கை இந்த நாடுகளிடம் இருந்து பெற்றது. (உ-எ)

### இராணுவம்:::

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டர் ஒன்று பலாலி, கட்டுவன், மயிலிட்டி, குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளைச் சுற்றிச் சுட்டது

இதேவேளை வயாவிளான் முகாமின் பின் பக்க வழியால் சிப்பாய்கள் பலாலியை நோக்கிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து வயாவிளான், ஒட்டகப்புலம், வடமூலை, திடற்புலம், கிட்டியப்புலம், புன்னாலைக்கட்டுவன் பகுதி மக்கள் வாகனங்கள் மூலம் மூடை முடிச்சுகளுடன் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். (உ-119)

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அனுமதிக் கடிதங்கள் கொண்டு செல்லப்பட வேண்டும் என பணிக்கப்பட்டிருக்கிறது.

அனுமதிப் பத்திரங்கள் பெறாது சென்ற சில லொறிகள் நேற்று ஆனையிறவுடன் திருப்பி அனுப்பப்பட்டன.

சில லொறிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

குறிப்பிட்ட அனுமதிப் பத்திரங்கள் பெறாது வரும் லொறிகள் ஆனையிறவு முகாமைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது என முகாம் சிப்பாய்கள் லொறிச் சாரதிகளுக்கு தெரிவித்துள்ளனர். (உ-10)

# இலங்கை உளவாளிகள் மீது சென்னையில் வழக்கு

சென்னை, ஜூன் 17

உளவாளிகள் என்ற சந்தேகத்தில் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் இலங்கை அரசு அதிகாரிகளுடன் வைத்திருந்த தொடர்பை சென்னைப் பொலீஸார் கண்டு பிடித்தனர்.

உளவாளிகள் என்று கைது செய்யப்பட்டவர்களில் 3 இலங்கைத் தமிழர், 2 இந்தியத் தமிழர் மீது அரசு இரகசியச் சட்டம், வெளிநாட்டவர் சட்டம், சதி - இந்திய பாஸ்போர்ட் சட்டம் ஆகியவற்றின் கீழ் சென்னைப் பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சென்னைப் பொலீஸார் நடத்திய புலன்விசாரணையில் மேலும் தெரியவந்ததாவது;

இலங்கைப் பிரச்சினையில் அனுதாபம் கொண்டவர்கள் என்ற போர்வையில் தமிழ்ப் போராளிகள் அமைப்புகள், தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் நடவடிக்கைகளை உளவு பார்த்துத் தகவல்களை இலங்கை அரசு அதிகாரிகளுக்கு தெரிவித்து வந்தனராம்.

அப்படி தெரிவித்து வந்த ஒரு கட்டத்தில் பொலீஸாரிடம் கையும் மெய்யுமாக இவர்கள் சிக்கிக்கொண்டனர்.

அண்மையில் இடம் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான மோதலிலும் இவர்களுக்குப் பங்கு இருந்ததாகவும் விசாரணையில் வெளி வந்தது

தொடர்ச்சியான வன்செயல்களை நடத்தி வைப்பதன் மூலம் போராளிகளுக்கு அவமரியாதை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அவர்கள் முயற்சித்தனராம்.

துப்பு ஒன்றை வைத்தே பொலீஸார் இந்த உளவுச் சம்பவத்தை முறியடித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமான 5 பேர்களின் பெயர்களை பொலீஸார் வெளியிட்டனர்.

பெயர்கள் வருமாறு:

1. கந்தசாமி, முன்னாள் இலங்கை பொலீஸ் அதிகாரி, இலங்கைத் தமிழ் அமைச்சர் ஒருவரின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி.
2. வி.கே.ரி. பாலன், பிரயாண முகவர்.
3. அ மணவைத்தம்பி, இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்.
4. ரஞ்சன், சென்னை.
5. ராதா, திருச்சி.

(உ-எ-2)

### பஸ் சேவை

(1 ஆம் பக்கதொடர்ச்சி)

வரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சபைக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டு பரல் டீசல் மாங்குளத்தில் ஆயுதப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அதைத் திரும்பப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் திரு. கனகரத்தினம் மேலும் சொன்னார்.

இதனிடையில் யாழ் பஸ் டிப்போவில் டீசல் முடிவடைந்து விட்டதைத் தொடர்ந்து பஸ்கள் பல நேற்று வரிசையாக பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இரண்டு, மூன்று தினங்களில் டீசல் வந்து சேரா விட்டால் முழு பஸ் சேவையுமே முற்றாக ஸ்தம்பிதமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (உ-எ-10)

### மீனவர் மீது சூடு!

கரவெட்டி, ஜூன் 18

நேற்று காலை 7 மணி அளவில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீன்பிடிக்க வலைகளுடன் சென்ற மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

### அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரகவனஞ் செலுத்தி வருகின்றதாகவும் தெரிய வருகிறது.

அரசாங்கம் நடத்தும் பொதுக் கூட்டங்களில் எதிர்க் கட்சியினரையும் தீவிரவாத எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆனால் கூட்டரசாங்கம் ஒன்றில் சேர்ந்து கொள்ள சுதந்திரக்கட்சி சம்மதிக்காது என்றும் கூறப்படுகின்றது. (உ-எ-2)

### ராஜீவுக்கு புதிய விளக்கங்கள்

புதுடில்லி, ஜூன் 17

இலங்கை அரசின் இரகசிய விளக்கங்கள் இந்த வாரம் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்தினவால் கையளிக்கப்படும்.

இலங்கையின் புதிய விளக்கங்களுடன், திரு திலகரத்தின கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லி சென்றடைந்தார். (உ-எ)

### நாட்டிய நாடக கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜூன் 18

இராமநாதன் நுண்கலைக்கழக கவின்கலை மன்ற ஆதரவில் நடைபெற்றுவரும் கருத்தரங்கு நிகழ்ச்சி தொடரில் இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெற இருந்த நாட்டிய நாடக கருத்தரங்கு இன்று புதன் கிழமை பி.ப 1 மணிக்கு மேற்படி கழக அரங்கில் நடைபெறும்.

இக்கருத்தரங்கை சாஸ்திர செயல் ரீதியாக பிரம்மஸ்ரீ வீரமணிஐயர். (விரிவுரையாளர் ஆசிரிய கலாசாலை) அவர்கள் நடத்துவார்கள். (இ-10)

### பஸ்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் பயணிகளுடன் கிளிநொச்சி வழியாக நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

### விற்பனைக்கு

நல்ல இன, இரண்டு மாத பூச்சி அகற்றிய அழகான அல்சேஷன் (Alsation) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

அரியரத்தினம், மார்க்கெற் றோட், (பேக்கரி முன்பாக) கொக்குவில் மேற்கு.

### தவறிவிட்டது

11-6-86 இரவு 7 மணியளவில் தட்டாதெரு சந்திக்கும் கந்தரோடை சந்திக்கும் இடையில் எனது மகளின் பிறந்த தினப் படங்கள் (30) நெகடிவ் அல்பத்துடன் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் உள்ள முகவரிக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆகையால் எடுத்தவர்கள் உடன் கொடுத்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். விலாசம்; கணேசன், ஆர்ட் ஸ்ருடியோ, K.K.S றோட், கொக்குவில் அல்லது முருகன் ஆபரண மஹால், சுன்னாகம்.

### 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

**செல்வன் விஜிதரன்**

ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த சந்திரசேகர்-மீனம்பிகை தம்பதிகளின் மகன் விஜிதரன் இன்று (18-06-86) தனது இரண்டாவது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்

## தேவை

* காசாளர் (Cashier)
* எழுதுவினைஞர் / கணக்குப் பரிசோதகர் (Clerk / Auditor)
* கணக்குப் பதிவாளர் (Book-Keeper)

கணக்கியல் துறையில் 5 வருட அனுபவமும், கணக்குப் பரிசோதனையில் பரீட்சயமும் அவசியம்.

25-06-1986க்கு முன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

த.பெ. இல 23,
யாழ்ப்பாணம்.

**ROCK** Engineers & Contractors

IN

**TUBE WELLS, PLUMBING, FITTINGS, TANK BUILDING**
and other Construction Works.

Tubewell Water is Pure, Fresh, Healthy & Safty.

குழாய்க் கிணறுகளை அமையுங்கள் நாட்டை வளம்படுத்துங்கள்.

உங்கள் தேவைகள்:

(1) வீட்டுத் தேவை
(2) பெரிய அளவிலான பயிர்ச் செய்கை
(3) தொழிற்சாலைக்கான நீர்த் தேவை
(4) உவர்நீரைத் தவிர்த்து நல்ல நீரைப் பெறுதல்

எதுவானாலும் எம்முடன் கலந்து ஆலோசியுங்கள்.

**றொக் எஞ்ஜினியர்ஸ்**
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 18—6—1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under Number Q J 60 M61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org